# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 42-2022*

## கல்வி - 22.10.2022 - நேரமாற்றம்!

*லோறன்ஸ்கூக் வளாகத்தின் ஆண்டுவிழாவைக் கருத்திற்கொண்டு எமது மாணவர்களுக்கு நிகழ்ச்சிகளையும் பயிற்றுவிக்கவேண்டும் அத்துடன் கல்விநேரத்தினையும் பாதிப்படையாமல் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக* ***வழமையான பாடசாலை நேரத்திலிருந்து 30நிமிடங்கள் முன்னதாக பாடசாலை தொடங்கும்*** *என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். இந்நேரமாற்றம் ஆண்டுவிழா வரை மட்டுமே இடம்பெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.*

***புதியநேரம்***

| | |
|---|---|
| *மழலையர் - சிறுவர்நிலை* | *09:00 - 12:00* |
| *வகுப்பு 1 - வகுப்பு 11* | *09:00 - 12:30* |
| *கலை வகுப்புகள்* | *வழமைபோல்..* |

*இதில் மேலதிக பயிற்சி மற்றும் நேரங்கள் தேவைப்படின் ஆசிரியர்கள் பெற்றோருடன் கலந்தாலோசித்து முடிவெடுப்பார்கள்.*

**அறிவாடல் உலகளாவிய போட்டி - எதிர்வரும் 22.10.2022 சனிக்கிழமை காலை 10மணியிலிருந்து இடம்பெறும்.**

பங்குகொள்ளவுள்ள மாணவர்கள் அனைவருக்கும் அனைத்துலக அறிவாடல் போட்டியில் வெற்றிபெற எமது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தொடக்கநிலை - 3வயது மாணவர்கள்**

பலபெற்றோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 3வயது மாணவர்களை உள்வாங்குவதாகவும் அவர்களை மழலையர் வகுப்புடன் இணைக்கவும் முடிவெடுத்துள்ளோம். அம்மாணவர்கள் அடுத்த கல்வியாண்டிலும் தொடர்ந்தும் மழலையர் வகுப்பில் சேர்க்கப்படவுள்ளார்கள் என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றோம். இத்தகவலை தங்களுக்குத் தெரிந்த உரியபெற்றோருக்கும் வழங்கவும்.

***முக்கிய கவனம்!!!!***

*மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.*

**கலை**

22.10.2022 சனிக்கிழமை வழமைபோல் வழங்கப்பட்ட நேரத்தில் நடைபெறும்.

**சிற்றுண்டிச்சாலை**

இவ்வாரம் வழமைபோல் இயங்குநிலையில் இருக்கும்.

**நிதி**

கடந்த பெற்றோர் சந்திப்பில் முடிவெடுத்தது போல் இன்னும் கட்டணம் செலுத்தாதவர்கலுக்கான கட்டணவிபரம் பிள்ளைகளின் புத்தகப் பைகளினூடாக விரைவில் அனுப்பிவைக்கப்படும். கட்டணம் செலுத்தியதில்/ செலுத்தவேண்டியதில் ஐயப்பாடு இருப்பின் எமது நிதிப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

**ஆண்டு விழா - 28.01.2023**

அன்னை லோறன்ஸ்கூக் வளாகத்தின் 20வது ஆண்டுவிழாவிற்கான ஏற்பாடுகள் மற்றும் திட்டமிடல் தொடங்கவுள்ளோம். எம்மோடு இணைந்து செயற்பட பலர் தொடர்புகொண்டுள்ளீர்கள். மகிழ்ச்சி.. தொடர்ந்தும் இணைந்து பணியாற்ற விரும்புபவர்கள் எம்மோடு 91875537 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!